# மொழிக் குறித்த வகைதொகை ஆய்வுகள்

# Taxonomic Studies of Language

***முனைவர் ஜோ. சம்பத்குமார்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

**Dr. J. Sampath Kumar**
*Assistant Professor, Tamil Department*
*Tiruthangal Nadar College, Chennai*

## ஆய்வுச் சுருக்கம்

*உலக மொழிகள் அனைத்தும் ஏதோ ஒரு மூலமொழியிலிருந்து கிளைத்திருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. இந்தவகையில் ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் உலகின் முதல் மொழியைத் தேடும் முயற்சியிலும் சமகாலத்தில் பேசப்பட்டு வரும் மொழிகளின் ஒத்தத் தன்மைகளைக் கணக்கில் கொண்டு அவற்றைத் தனித்தனிக் குடும்பங்களாக வகை தொகைப்படுத்தும் முயற்சியிலும் நீண்ட நெடும் காலமாக ஈடுப்பட்டு வந்துள்ளனர். இம்முயற்சிகளின் விளைவாக உலக மொழிகளின் பொதுமைக்கூறுகளைக் கணக்கில் கொண்டு உலக மொழிகளை இன அடிப்படையில் பல்வேறு மொழியினங்களாகப் பிரிப்பர்.*

***முக்கியச் சொற்கள்:***
*உலக மொழி, மொழிக் குடும்பம், ராபர்ட் கால்டுவெல், திராவிடம், மொழியியல்*

## Abstract

*Scholars are of the opinion that all world languages must be derived from some source language. Researchers have long been involved in the search for the world’s first language and in classifying it into separate families, taking into account the similarities between the languages spoken at the time.*

***Keywords:***
*World language, language family, Robert Caldwell, dravidian, linguistics*

**Citation**

Sampath Kumar, J. “Taxonomic Studies of Language.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 1, 2021, pp. 1-10.

*இந்தோ ஐரோப்பிய மொழிகள்* (Indo & European Languages), *சைனோ - திபேத்திய மொழிகள்* (Sino & Tibetan Languages), *செமிட்டோ ஹெமிட்டிக் மொழிகள்* (Semito Hemitic Languages), *உராலிக் அல்டய்க் மொழிகள்* (Uralic Altaic Languages), *திராவிட மொழிகள், ஆப்பிரிக்க மொழிகள் (இனப் பிரிவோடு பிற நிலையிலும் உள்ளவை), மலேயோ பாலினேசியன் மொழிகள்* (Malayo Polynesian Languages), *அமெரிக்க இந்திய மொழிகள் ஆஸ்திரோ ஆசிய மொழிகள்* (Arstro Asiatic Languages), *பாப்பன் மொழிகள்* (Paupan Languages) *எனப் பல இனங்களாகப் பிரிப்பர். இவற்றுள் சில நாடுகளை அடிப்படையாக வைத்து ஏற்பட்ட பெயர்கள் எனினும் அவற்றிடையே இன ஒற்றுமையும் காணப்படுவதாகச் சொல்வர்.*

*அதாவது, ஒவ்வொரு மொழிக் குடும்பத்தையும் ஒப்பிட்டு அதனிடையேயான ஒற்றுமை, வேற்றுமையைக் கணக்கீட்டு, அதில் உள்ள சொற்கள், சொற்களின் அமைப்பு, அவற்றின் செயற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படைகளாகக் கொண்டு வகைதொகை செய்து மொழியியல், மானிடவியல் அறிஞர்கள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வுகளை வரலாற்று முறையில் தொகுத்து, பகுத்து ஆராய்கிறது.*

*உலக மொழிகள் அனைத்தும் ஒரே மொழியிலிருந்து தோன்றியிருக்க வாய்ப்புண்டு என்ற கொள்கை 19ஆம் நூற்றாண்டில் மாக்ஸ்முல்லருக்கும் இசைவானதாக இருந்துள்ளது. அதாவது, இம்மொழிகளின் சொல் ஒற்றுமைகளும் வடிவ ஒற்றுமைகளும் ஆரிய, செமித்திய இனங்களிற் காணப்படும் ஒற்றுமையினின்றும் வேறுபட்டவை யாயினும், தற்செயலாய் ஏற்படக் கூடியவை அல்ல. ஒரே முதன்மொழியிலிருந்து ஏற்பட்டவையாகவே இருக்க வேண்டும் என்பது தெளிவு (கண்ணுசாமிபிள்ளை (மொ.ஆ); 1941: 96) என்கிறார் மாக்ஸ்முல்லர். 20ஆம் நூற்றாண்டில் ஞால முதன் மொழி எதுவாக இருக்கும் என்கிற ஆய்வில் ராபர்ட் கால்டுவெல் (1856), கா. சுப்பிரமணிய பிள்ளை (1939), அகத்தியலிங்கம் (1968), இரத்தினசாமி (1994), இராசேந்திரன் (தேவிரா) (2005), அலெக்சாந்தர் காந்திரதாவ் (2006), ப. சண்முகசுந்தரம் (2011), ச. மனோகரன் (2012) சோ. ராஜலெட்சுமி (2014) ஆகியோர் மொழிகளைக் கீழ்க்கண்டவாறு குடும்பங்களாகப் பிரித்துள்ளனர்.*

**ராபர்ட் கால்டுவெல் (1856)**

*கால்டுவெல் அவர்கள் அயர்லாந்து நாட்டைச் சார்ந்த மொழியியல் அறிஞர். இந்தியாவிற்கு சமயம் பரப்பவந்த இவர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை உருவாக்கும் அளவிற்கு மொழி ஆய்வின்பால் ஈர்க்கப்பட்டார். முதன்முதலில் திராவிட மொழிக் குடும்ப வகைமைப்பற்றியும் “திராவிடம்” என்ற சொல்லின் பொருண்மைக் குறித்தும் ஆராய்ந்த அறிஞர் இவர். பின்வந்த திராவிட சொல்லாராய்ச்சிக்கு வித்திட்டவரும் இவரே.மொழிக் குடும்ப வகைமை மற்றும் மொழி ஆய்வு ஆகியவற்றிற்கு கால்டுவெல் எடுத்தாளும் சான்றுகள் மிகமுதன்மையானவை என்பதை யாரும் மறுக்கமுடியாது.பல்வேறு தரவுகளை எடுத்தாண்டு பேசுகின்ற இவரின் ஆய்வுத் திறம் வியப்பிற்குரியது. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத இவரின் தமிழ் ஈடுப்பாடு போற்றுதற்குரியது.இவரின் மொழிக் குடும்ப வகைமை ஆய்வுகளை நோக்கலாம்.*

*உலக மொழிகளை மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தி ஆய்வை மேற்கொண்ட பிரடரிஷ் வான் சிலேகல், ராஸ்க், பிரிச்சார்டு, போட்லிங், பாலர், ஹன்ஃபல்வி, பாட், பிரடெரிக், பிளாக், கஸ்த்ரேன், மாக்ஸ்முல்லர், ஆப்பர்ட், போப், ஷ்லெஜெல், பெஹிஸ்தன் போன்ற*

*அறிஞர்களின் ஆய்வுகளைக் கணக்கில் கொண்டு கால்டுவெல் அவர்கள் திராவிட மொழிக் குடும்ப வகைமைகளுக்குள் முதன்முதலில் நுழைகிறார். மேற்கண்ட ஆய்வு அறிஞர்களின் கருத்துகளை ஏற்றும் மறுத்தும் இவரின் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அந்தவகையில்,*

*திராவிட மொழிகள் சித்திய மொழியினத்தோடு சேர்த்தற்குரியனவே அன்றி இந்து - ஐரோப்பிய மொழியினத்தோடு சேர்த்தற்குரியனவாகா என்பது பேராசிரியர் ராஸ்க் என்பாரின் முடிபாகும். சேர்த்தற்குரியன என்று மட்டும் கூறலாமே அன்றி, சேர்ந்தன என்று சொல்லிவிடுதற்கில்லை; அவை சித்திய மொழிகளோடு தொடர்புடையனவேன்றிச் சித்திய மொழியினத்திலிருந்து பெறப்பட்டவையல்ல. சித்திய மொழியினம் என்பதில் பின்னிஷ், துருக்கி, மங்கோலியம், துங்கூஸியம் ஆகிய மொழியினங்கள் அடங்கும் (மேற்படி; 94) என்று ராஸ்க் வகைப்படுத்துகிறார். இம்மொழிகள் அனைத்தும் ஒரே இலக்கண அமைப்புடையவையாய், ஒரேபடித்தான பொது விதிகளையும் பின்பற்றுகின்றன. உருபுகள் அல்லது துணைச் சொற்களைச் சேர்ப்பதனாலேயே அவை வேறுபடுகின்றன என்பது அவரின் கருத்து. இவ்வகையில் இந்து - ஐரோப்பிய மொழிகளும் சித்திய மொழிகளைப் போலவே முதன்முதல் அடுக்கியல் முறையையே கையாண்டிருந்தன என்று தோற்றுகின்றன. ஆனால், அவற்றின் அடைகள் அல்லது துணைச் சொற்கள் வரவரத் தேய்ந்து விகுதிகளாகவோ உருபுகளாகவோ மாறிவிட்டமையால் அவை சித்திய இனங்களைப் போலவுமின்றி, சீன மொழிகளைப் போலவுமின்றி தனிப்பட்ட ஒருவகை இனமாயின (மேற்படி; 94, 95) என்று அவர் கூறுகிறார்.*

*திராவிட மொழிகளின் இலக்கண அமைதிகளும், சொற்றொடர் முறையும் மேற்போக்காகப் பார்ப்பவர்க்குக்கூட விளங்கக் கூடுமாயினும், அவற்றின் ஒலிமுறை, அவற்றின் இடவகை மாற்றங்கள், வழக்குகள், இலக்கண உருமாற்றங்கள் ஆகியவை தனிப்பட்ட ஆராய்ச்சியாலன்றி விளங்கத் தக்கவையல்ல என்பது கால்டுவெல் அவர்களின் கருத்து.*

*ஆக, மொழிக் குடும்ப வகைமை ஆய்வில் கால்டுவெல் அவர்கள் திராவிட மொழிக் குடும்பம் என்பதை சித்திய மொழிக் குடும்பத்தின் தொகுதி என்பதாக வகைப்படுத்திக் கொள்கிறார்.*

**கா. சுப்பிரமணிய பிள்ளை (1939)**

*கால்டுவெல் போன்றோர் ஆங்கில மொழியில் உருவாக்கிய நூலைப்போலத் தமிழில் இல்லை என்கிற குறையைப் போக்க இவரைப் போன்றோர் "மொழி" சார்ந்த ஆய்வுகளில் ஈடுபடத்தொடங்கின. மொழியின் தோற்றம், வளர்ச்சி, அதன் அமைப்பு, இனம் தொடர்பான ஆய்வுகளில் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களின் ஆய்வு குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் "மொழிநூற் கொள்கையும் தமிழ் மொழி அமைப்பும் (1939)' என்கிற நூல் முதன்மையானது. இவ்வறிஞரின் மொழி வகைமைக் குறித்த ஆய்வுகளை இனி காணலாம்.*

*தனது ஆய்வைப் பின்வருமாறு தொடங்குகிறார் சுப்பிரமணியப் பிள்ளை மத்திய இந்தியாவிலுள்ள நாகரிக முதிராத பல மக்களின் மொழிகள், கொலேரிய* (Kolarian) *குடும்பத்தைச் சேர்ந்தன. அவற்றை முண்டா* (munda) *மொழிகள் என்பர். அவைகள் திராவிடப் பெருங்குடும்பச் சார்பினவே என்பது டாக்டர். கிரையர்சன்* (Dr. Grierson) *கருத்து. பெலுசிஸ்தானிற் பேசப்படும் பிராஹீயி (*Brahui) *என்ற மொழியும் திராவிடக் குழுவினதே என்று கருதுவர் (1939: 13).*

*இந்தியாவிற்கு வெளியே சீனமொழி மிகப் பழமையானது. இலக்கணத்தால் அதனோடு ஒற்றுமை உடையவாய்க் கொச்சின்சீனா, கம்போடியா முதலிய இடங்களில் வழங்கும் மொழிகள் அன்னா மித்தொகுதி* (Annamese group) *எனப்படும். சயா மொழி, தை* (Thai) *எனப்படும். இலக்கணத்தால் அது சீனத்தோ டொத்ததே எனினும் சொற்கள் வேறாகவே உள்ளன. பர்மியப் பேச்சும் அத்தகையதே. திபேத்தின் மொழியில் ஓரசைச் சொற்கள் மிகுதியாய் இல்லை (மேற்படி; 13) என்பது சுப்பிரமணியன் அவர்களின் கருத்து.*

**அகத்தியலிங்கம் (1968)**

*கால்டுவெல்லின் நூற்றாண்டு சூழலில் அண்ணாமலைப் பல்கலைக்கழக உயராய்வு மையம் பெரிய பங்களிப்பைச் செய்தது. அதன் தலைவராக பேரா. ச. அகத்தியலிங்கம் அவர்கள் பொறுப்பேற்று மொழி ஆய்வில் பல சாதனைகளைச் செய்தார். பேராசிரியர் உலக மொழிகள் எனும் பொருண்மையில் பல நூல்கள் இயற்றியுள்ளார். இவரது நூல்கள் மாணவர்களுக்கான பாடநூல்களாக இன்றும் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.*

*உலக மொழிகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் அகத்தியலிங்கனார் "மொழி" மனித இனத்திற்கு முதன்மையான ஆற்றல் என்று உணர்ந்து அதை ஆய்வுச் செய்ய தொடங்கு கிறார். இதேபோன்று உலக மொழிகளைத் தனக்கு முன் ஆய்வுப் பொருளாகக் கொண்ட அறிஞர்களின் கருத்துகளை உள்வாங்கி தனக்கான முறையியலை இப்புலத்தில் உருவாக்கி கொள்கிறார்.*

*உலகில் பேசப்படும் மொழிகளின் ஒலி குறிப்புகள், ஒலி குறிப்புகளால் இணைந்த சொற்கள், சொற்கள் இணைந்த தொடர்கள் ஆகியவற்றில் மொழிகளுக்கிடையே ஒற்றுமையும் வேற்றுமையும் இருப்பதைக் காட்டி, மொழிகளுக்கு இடையிலான தொடர்பைக் கொண்டு இனமாக அல்லது ஒரு குடும்பமாக வரையறை செய்ய பல்வேறு அறிஞர்கள் முயன்றதைப் போலவே பேராசிரியரும் தனது ஆய்வை எடுத்துரைக்கிறார்.*

*அகத்தியலிங்கனார் உலக மொழிகளை தனிநிலை மொழி, ஒட்டுநிலை மொழி, உட்பிணைப்பு நிலைமொழி, இணைப்பு நிலைமொழி, பல்லிணைப்பு நிலைமொழி, உள்ளடக்கு நிலைமொழி என்று வகைப்படுத்திக் கொள்கிறார். இவரே குறிப்பிடுவதைப் போல வான் ஹம்போல்ட் (1767 - 1835) என்ற அறிஞர் உலக மொழிகள் அனைத்தையும் உட்பிணைப்பு நிலைமொழி, ஒட்டுநிலை மொழி, தனிநிலை மொழி, உள்ளடக்கு நிலைமொழி என்று நான்காகப் பகுத்துள்ளதை அடியொற்றியே பேராசிரியர் அவர்கள் மேற்சுட்டிய ஆய்வுப் பகுப்பிற்கு வந்து சேருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

**இரத்தினசாமி (1994)**

*இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேனாள் தேர்வாணையராகப் பணியாற்றியவர் மொழியியல் அறிஞர் இவரைப் பற்றி கூறுகையில், "தமிழ் மொழி உலக மொழிகளில் சிறந்த மொழியாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்கிற அவா மிக்கவர்" என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார். இவரின் மொழி வகைமை குறித்த ஆய்வுகளை இனி காணலாம்.*

*உலக மொழிகளை மொழியியல் அறிஞர்கள் பகுத்துள்ள முறைகளை கீழ்காணுமாறு எடுத்துக்காட்டுகிறார். அவை,*

**சென்டம் மொழிகள்:**

*கிரீக், லத்தீன், இத்தாலியன், ருமேனியன், பிரஞ்சு, ✽பானிஷ், போர்க்சுகீஸ், ஐரிஷ், ஸ்காட்டிஷ், ஆங்கிலம், ஜெர்மன், டச்சு, டேனிஷ், நார்விஜியன், சுவீடிஷ் முதலியவை.*

**சதம்மொழிகள்:**

*பால்டிக், சிலாவிக், இரானியன், பெர்சியன், குர்டிஷ், ஆப்கன், பெலுச்சி முதலியன.*

**கெல்டிக் மொழிகள்:**

*பண்டு ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவி இருந்தவை. இப்பொழுது பிரிட்டனிலும், பிரான்சிலும் சிறுபான்மையினரால் பேசப்படுவன.*

**பால்டோ சிலாவிக் மொழிகள்:**

*லித்துவேனியா, லாட்வியா, ரஷ்யா, போலந்து முதலிய நாடுகளில் பேசப்படுபவை.*

**ஹேமிட்டோ செமிட்டிக்:**

*பழைய எகிப்திய மொழி, பெர்பர் மொழிகள், குர்ஷித் மொழிகள், சாட்மொழிகள், உகாரிடிக், ஆரமேய்க், அக்கேடியன், ஹீப்ரு, போன்ஷியன் முதலிய மொழிகள்.*

**அரேபிய மொழி:**

*செமிட்டிக் இனத்தைச் சேர்ந்தது. அரேபியா, ஈராக், எகிப்து முதலிய நாடுகளில் பேசப்படுவது.*

**ஆப்பிரிக்க மொழிகள்:**

*தெற்கு ஆப்பிரிக்காவிலும், மத்திய ஆப்பிரிக்காவிலும், பேசப்படுபவை.*

**இந்தோ ஈரானியன் அல்லது ஆரிய மொழிகள்:**

*வட இந்தியாவிலும், இலங்கையிலும் பேசப்படுபவை.*

**திராவிட மொழிகள்:**

*தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குடக, துளு, தோடா, கோத்தா, கொரகா, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலமி, பர்ஜி, கதபா, கொண்டா, நாயக்கி, கெங்கோ, மண்டா, குருக், மால்தோ, பிராகூய் ஆக 23 மொழிகள்.*

**தென்கிழக்கு ஆசிய மொழிகள்:**

*வியட்நாம், காம்போடியா, மலேசியா முதலிய நாடுகளில் பேசப்படுபவை.*

**ஜப்பானிய மொழி:**

*ஜப்பானிலும், கொரியாவிலும் பேசப்படுவது.*

**மலேயா-பாலினேசியன்:**

*பசிபிக் தீவுகளில் பேசப்படுபவை.*

**பாப்புவன மொழிகள்:**

*நீயுகினியிலும், தீவுகளிலும் பேசப்படுபவை.*

**ஆஸ்திரேலிய மொழிகள்:**

*தீவுகளில் பேசப்படுபவை.*

**அமெரிக்க - இந்திய மொழிகள்:**

*அமெரிக்கத்தீவுகளில் பேசப்படுபவை.*

*இலத்தீன், அக்கேடியன், சுமேரியன், ஆரமைக் முதலிய பழைய மொழிகள் பேச்சு வழக்கற்று காணப்படுகின்றன (1994: 2, 3). என்று எடுத்துக்காட்டுகிறார் இரத்தினசாமி. மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடும் இப்பகுப்புகளுக்கு மேலாக இரத்தினசாமி அவர்கள் புதிதாக ஒன்றையும் அவரது மொழி பகுப்பாகக் கொள்ள முடியவில்லை.எனவே அவர் எடுத்துக்காட்டிய மொழி வகைமைப் பகுப்புகள் மட்டுமே மேலே காட்டப்பட்டுள்ளன.*

**அலெக்சாந்தர் காந்திரதாவ் (2006)**

*சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துகளை 1965இல் திராவிட மொழி எனக் கண்டுணர்ந்த சோவியத் அறிஞர் குழுவினருள் ஒருவர் இவர். அறிவியல் செய்திகளை வெகுமக்களுக்கு புரியும் வகையில் எழுதியவர்.இவரின் "முப்பெரும் கடற்புதிர்கள்" என்ற ஆய்வு நூல் குறிப்பிடத்தக்கது.17க்கும் மேற்பட்ட நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வு கட்டுரைகளையும் படைத்தவர் இவர்.சிந்துவெளி தொல்தமிழ் நாகரிகம் என்பதும் இவரது நூல்களுள் குறிப்பிடத்தக்கது.இனி இவரது மொழி வகைமை குறித்த ஆய்வுகளை காணலாம்.*

*20ஆம் நூற்றாண்டில் ஞால முதன் மொழி ஆய்வில் ஈடுபட்ட மேனாட்டறிஞர்கள் பெதர்சன், திராம்பெத்தி, சுவாதெசு, கிரீன் பெர்க், மெரிட் ரூலன், இல்லிச் சுவிதிச், தால்கோபால்ஸ்கி, செவரோஸ்கின், ஸ்தாரோஸ்தின், பாம்ஹார்டு மற்றும் கெர்ன்ஸ் போன்ற பலராவர். பல்வேறு மொழிக் குடும்பங்களையும் பின்வருமாறு ஒரு சில பெருங்குடும்பங்களாக* (Super families) *வகைப்படுத்தலாம் என்பது அவர்கள் கண்டுள்ள உண்மையாகும்.*

i *நாஸ்திராடிக் (இந்தோ - ஐரோப்பியன், திராவிட மொழிகள், உராலிக், அல்தாய்க், கார்த்வெல்லியன், ஆப்ரோ - ஏசியாடிக் -அதாவது செமித்திய - ஹாமித்தியக் குடும்பம் ஆகிய மொழிக் குடும்பங்கள் இதில் அடங்கும்). கிரீன்பெர்க் வகுத்துள்ள யூரேசியாடிக் பெருங்குடும்பத்துக்கும் இதற்கும் அதிக வேறுபாடு இல்லை. யூரேசியாடிக்கில் அடங்கியவை எத்ருஸ்கன், இந்தோ - ஐரோப்பியன், உராலிக் - யூகாகீர், அல்தாய்க், கொரியன் - சப்பானியம் - ஐனு, கில்யாக், சுகோதியன், எஸ்கிமோ - அல்யூத் ஆகிய மொழிக்குடும்பங்களாகும்.*

ii *2000 அக்டோபரில் ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் பத்ரி ராஜூ கிருஷ்ணமூர்த்தியைக் கிரீன்பெர்க் சந்தித்த பொழுது திராவிட மொழி யூரேசியாடிக் பெருங்குடும்பத்தின் சகோதரியாக இருக்கலாம். மகளாக இருக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.* (Bh. Krishnamurthi. The Dravidian Languages; 2003, 46), *இதிலிருந்து ஸ்லாவ், இரானியன்,*

*வேதமொழி / சமஸ்கிருதம், கிரீக், இலத்தீன், கெல்திக், செருமானியம் போன்ற மொழிக் குடும்பங்களுக்கெல்லாம் தாயான இந்தோ ஐரோப்பியத்தை வடத் தொன்மை வாய்ந்தது திராவிட மொழிக்குடும்பம், அதாவது பழந்தமிழ் என்று உணரலாம் (இராமநாதன் (மொ.ஆ); 2006: 11) என்பது அலெக்சாண்டர் அவர்களின் ஆய்வு முடிவு இவற்றோடு உலக மொழிகளை பின்வருமாறும் பகுக்கிறார்.*

iii *சீன - காகேசியன்*
iv *ஆஸ்திரிக் (முண்டா போன்றவை)*
v *அமெரிக்க இந்திய மொழிகள்*
vi *இந்தோ - பசிபிக்*
vii *கோய்சான்*
viii *காங்கோ - சகாரா*

*பல்வேறு மொழிக் குடும்பங்களை இணைத்து அவற்றுக்கு மூலமான மொழி பெருங்குடும்பங்களைக் காணும் ஆய்வாளர்களுள் சிலர் அதற்கும் மேலே போய் ஞால முதன்மொழி (மாந்தனின் முதல் தாய்மொழி) ஆய்வுக்கும் சென்றுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகிறார். இவரது ஆய்வு பெரும்பாலும் உலகின் மூல மொழியை கண்டறியும் முயற்சிக்கானதாகத் தோன்றுகிறது.இதற்காகப் பல்வேறு அறிஞர்களின் ஆய்வுகளை தன் ஆய்வுகளுக்கான தரவுகளாகக் கையாள்கிறார் இவர்.*

**ச. மனோகரன் (2012)**

*அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் படித்த இவர். நடுவணரசின் மானுடவியல் அளவாய்வுத் துறையில் தலைமை அலுவலராக கொல்கத்தாவில் பணியாற்றியவர். அந்தமான் மற்றும் பல மாநிலங்களின் தாய்மொழிகள் பற்றி ஆய்வை மேற்கொண்டு அவற்றை தொகுத்துளத்துள்ளார்.அதுமட்டுமல்லாமல் தமிழ் நாட்டில் நடந்த இனவரைவியல் ஆய்விற்கு ஒருங்கிணைப்பாளராகவும் பதிப்பாளராகவும் செயல்பட்டுள்ளார்.அதோடு, நடுவணரசின் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் அகராதியியல் துறையில் பொறுப்பேற்று செயலாற்றியவர்.*

*இவர் இந்திய துணைக்கண்டத்தில் வாழும் மக்கள் பேசுகின்ற மொழிகள் குறித்த ஆய்வை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக இம்மக்கள்,*

1. *ஆஸ்ரோ - ஆசியாடிக் மொழிக்குடும்பம்* (Austro & Asiatic Language Family)
2. *திராவிட மொழிக்குடும்பம்* (Dravidian Language Family)
3. *இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பம்* (Indo & European Language Family)
4. *திபெத்தோ - சீனம் மொழிக்குடும்பம்* (Tibeto&Chinese Language Family) *(ச. மனோகரன்; 2012: 9)*

*போன்ற மொழிக் குடும்பங்கள் சார்ந்த மொழிகளைப் பேசுவதாகச் சுட்டிக்காட்டுகிறார். மேலும்,*

*இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த இந்தோ - ஆரியன்* (Indo&Aryan), *இந்தோ - ஈரானியம்* (Indo & Iranian) *ஆகிய துணை மொழிக்குடும்பங்களை* (subfamily)

*சேர்ந்த மொழிகளும், திபத்தோ - சீனம் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த திபெத்தோ - பர்மன்* (Tibeto & Burman) *துணை மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளும் இந்தியத் துணைக் கண்டத்தில் பேசப்படுகின்றன. மேலும், ஆஸ்த்ரோ - ஆசியாடிக் மொழிக்குடும்பத்தைச் சார்ந்த கிழக்கு ஆஸ்த்ரோ - ஆசியாடிக்* (Eastern Austro & Asiatic), *முண்டா பிரிவு* (Munda group), *ஆகிய இரு பிரிவுகளிலும் காணும் மொழிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் பேசப்படுகின்றன (மேற்படி; 10) என்பது மனோகரன் அவர்களின் கருத்து.*

**இரா.காமராசு (2015)**

*உலக மக்களை இன அடிப்படையில் வகைப்படுத்தும் முயற்சியில் மானிடவியலாளர் ஈடுபட்டனர். அதாவது, ஒவ்வொரு இனத்தையும் அடையாளம் காண்பது என்பதற்குரிய அணுகுமுறைகளையும் இனங்களுக்கு இடையிலான உறவைத் தீர்மானிக்கின்ற கூறுகளைக் கண்டுபிடிக்கின்ற கோட்பாடுகளையும் கொள்கைகளையும் உருவாக்குவதில் மானிடவியல் முன்னின்றனர் (இரா.காமராசு; 2015: 88) என்பதைக் கி. அரங்கன் எடுத்துக்காட்டுகிறார். அதோடு, ஒரு இனத்திற்கும் அந்த இனம் பேசுகின்ற மொழிக்கும் எவ்வாறு தொடர்பு இருக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு ஆய்வை முன்னெடுத்துச் செல்கிறார் இவர்.*

*அந்தவகையில், மொழிகளை வகைப்படுத்திய முயற்சிகளைப் புரிந்துகொள்ள வேண்டும். மேலும், உலக மொழிகளை இரு வகைகளில் வகைப்படுத்தலாம். ஒரு மொழிகளில் சில குடும்ப உறவைக் கொண்டுள்ளன. அம்மொழிகள் ஒரு மூல மொழியிலிருந்து வந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் ஆய்வை மேற்கொள்வது.அவை எவ்வாறு மூல மொழியிலிருந்து கிளைத்தன என்பதையும், அவை எத்தகைய மாற்றங்களை அடைந்தன என்பதையும், விதிகளின் மூலம் விளக்குவது. இரண்டாவது, உலக மொழிகளை அவற்றின் அமைப்புக் கூறுகளைக் கொண்டு வகைப்படுத்துவது, ஒலியனியல் கூறுகள் அல்லது உருபனியல் கூறுகள் அல்லது தொடரியல் கூறுகள் அடிப்படையில் மொழிகளின் வகைப்பாட்டை வரையறுக்கலாம். ஜப்பானிய மொழியையும் தமிழ் மொழியையும் சில அமைப்பியல் கூறுகளின் அடிப்படையில் ஒரு வகையாக அடக்கலாம். உலகில் உள்ள மொழிகள் அனைத்தையும் மொழியியலார் குடும்ப மொழிகளாக வகைப்பாடுத்தி ஆராய்ந்துள்ளதை எடுத்துக்காட்டி, வகையுறவு வகையில் இன்னொரு வகைப்பாட்டையும் மேற்கொண்டார்கள் என்கிற கருத்தாக்கத்தின் அடிப்படையில் மொழிகள் வகைப்படுத்தியது இங்குக் கவனிக்கத்தக்கது (மேற்படி) என்கிறார் கி. அரங்கன்.*

**நிறைவாக**

*உலக மொழிகளை மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தி ஆய்வை மேற்கொண்ட அறிஞர்களின் ஆய்வுகளைக் கணக்கில் கொண்டு மொழிக் குடும்ப வகைமைகளுக்குள் நுழைந்த அறிஞர்களுக்குமுன் நிகழ்ந்த ஆய்வறிஞர்களின் கருத்துகளை ஏற்றும் மறுத்தும் மொழி வகைமை ஆய்வுகள் நிகழ்ந்திருப்பதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்ந்துள்ளன.*

**குறிப்புகள்**

1. *அகத்தியலிங்கம், ச. (1968). உலகமொழிகள்* I. *அண்ணாமலை நகர், பொன்னகம்.*
2. *அகத்தியலிங்கம், ச. (1969). உலகமொழிகள்* II. *அண்ணாமலை நகர், பொன்னகம்.*

3. *அகத்தியலிங்கம், ச. (1972). உலகமொழிகள் III. அண்ணாமலை நகர், பொன்னகம்.*
4. *அகத்தியலிங்கம், ச. (1972). உலகமொழிகள் (மூன்றாம் பகுதி) உராலிக் - அல்டய்க் மொழிகள் அமெரிக்க இந்திய மொழிகள். சென்னை, பாரிநிலையம்.*
5. *அகத்தியலிங்கம், ச. (1973). உலக மொழிகள். அண்ணாமலைநகர், பொன்னகம்.*
6. *அகத்தியலிங்கம், ச. (1975). திராவிட மொழிகள் I. அண்ணாமலைநகர், பொன்னகம்,*
7. *அகத்தியலிங்கம், ச. (1976). திராவிட மொழிகள் II. அண்ணாமலைநகர், பொன்னகம். அகத்தியலிங்கம், ச. (1976). உலக மொழிகள் தொகுதி 5, பிரிவு 2, திராவிட மொழிகள். அண்ணாமலை நகர், பொன்னகம்.*
8. *அகத்தியலிங்கம், ச. (தொ.ஆ), (1977). மொழியியல் - வாழ்வும் வரலாறும். அண்ணாமலைநகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடு.*
9. *அரங்கன், கி. (1985). தொடரியல் மாற்றிலக்கண அணுகு முறை. தமிழ்ப் பல்கலைக்கழகம்.*
10. *ஆரோக்கியநாதன், ச. (1987). மொழியியல் - இருமொழிய ஆய்வுகள். விழுப்புரம், முத்துப் பதிப்பகம்.*
11. *ஆல்துரை, இரா.கு. (2006). படகு ஒரு திராவிட மொழி. நெலிகோலு வெளியீட்டகம், உதகமண்டலம்.*
12. *அறவாணன், க.ப. (ப.ஆ), (1988). மொழிப்பாடம். சென்னை, ஐந்திணைப் பதிப்பகம்.*
13. *இரத்தினசாமி, ஷி. (1994). தமிழ் எழுத்து (வரலாறும் சீர்த்திருத்தமும்). சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.*
14. *இராகவன், அ. (1980). ஆதித்தநல்லூரும் பொருநைவெளி நாகரிகமும். சென்னை, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*
15. *இராசேந்திரன், ச. (2004). தமிழில் சொல்லாக்கங்கள், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

## References

1 Agathiyalingam, S. (1968). *Ulagamozhigal I*. Annamalai Nagar, Ponnakam.
2 Agathiyalingam, S. (1969). *Ulagamozhigal II*. Annamalai Nagar, Ponnakam.
3 Agathiyalingam, S. (1972). *Ulagamozhigal III*. Annamalai Nagar, Ponnakam.
4 Agathiyalingam, S. (1972). *Ulagamozhigal (Part III) Uralic - Altai languages American Indian languages*. Chennai, Barinilayam.
5 Agathiyalingam, S. (1973). *Ulagamozhigal*. Annamalai Nagar, Ponnakam.
6 Agathiyalingam, S. (1975). *Dravidamozhigal I*. Annamalai Nagar, Ponnakam.
7 Agathiyalingam, S. (1976). *Dravidian mozhigal II*. Annamalai Nagar, Ponnakam.
8 Agathiyalingam, S. (1976). *Ulagamozhigal, Dravidian Languages*. Ponnakam, Annamalai Nagar, Volume 5, Section 2.
9 Agathiyalingam, S. (1977). *Mozhiyiyal - Vazhvum Varazharum*, Annamalai Nagar, Published by All India Tamil Linguistic Society.
10. Arangan, K. (1985). *Thodarial Matrilakkana Anugumurai*, Tamil University.
11. Arokiyanathan, S. (1987). *Mozhiyiyal - Irumozhi Ayivugal*, Villupuram, Muthu Pathipagam.
12. Althurai, R.K. (2006). *Padaku Oru Dravida Mozhli*, Ooty, Nezhikolu Veliyitagam.

13. Aravanan, K.P. (Editor), (1988). *Mozhipadam*, Chennai, Aintinai Pathipagam.
14. Rathinasamy, S. (1994). *Tamil Ezhuthu (Varalarum Seerthiruthamum),* Chennai, Manivasakkar Pathipagam.
15. Raghavan, A. (1980). *Adithanallurum Porunaiveli Nagarigamum,* Chennai, Theninthiya Saivasithantha Noorpathipu Kazhlagam.
16. Rasendran, S. (2004). *Tamizhil Sollakkangal*, Tamil University, Thanjavur.